# சைவமும் தமிழும்



செந்தமிழ்வாரிதி

முனைவர். இரா. செல்வக்கணபதி

சைவமும் தமிழும்

www.saivamonline.com

# Contact Details

www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

+91 94440 21113

Pay +91 94440 21113

UPI 9444021113@UPI



# 1. சைவமும் தமிழும்

## சைவ சமயம்

தமிழ் , இலக்கிய வளம் நிறைந்த மொழி. இலக்கியம் தோன்றுவதற்குப் பல அடிப்படைகள் உள்ளன. அவற்றுள் சமயமும் ஒன்று. தமிழில் சமயம் சார்ந்தே இலக்கியங்கள் பலவும் எழுந்துள்ளன. தமிழ்நாட்டில் பல சமயங்கள் நிலவி வருகின்றன. என்றாலும், பெரும்பாலான இலக்கியங்கள் சைவ சமயத்தைச் சார்ந்தே படைக்கப்பட்டுள்ளன.

ஒரு மொழிக்கு இலக்கியம் இலக்கணம் என இரு கூறுகள் உண்டு. அதுபோல் சமயம் சார்ந்த நூல்களிலும் தோத்திரம், சாத்திரம் என இரு பகுப்புகள் உள்ளன.

சைவ சமயக் கடவுளர்கள் மேல் பாடப்பெற்ற வழிபாட்டுப் பாடல்களைத் தோத்திரம் என்று கூறுவது வழக்கம். வழிபாட்டுப் பாடல்களின் தொகுப்புக்களையே சைவத் தமிழ் இலக்கியங்கள் என்று வகுத்துள்ளனர். பிற்காலத்தில் சைவ சமயம் சார்ந்து வாழ்ந்த அடியார்கள் மீதும் பாடல்கள் பாடப்பட்டன.

சைவத்தமிழ் இலக்கியங்களைப் பலவகையாகப் பகுத்துள்ளனர். திருமுறைகள், சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள் முதலியன குறிக்கத்தக்கன.

சைவம் என்பது சிவனை வழிபடும் நெறி.முருக



www.saivamonline.com

வழிபாடு, கொற்றவை வழிபாடு, விநாயகர் வழிபாடு முதலியன ஒரு காலத்தில் தனித்தனியே நிகழ்ந்துள்ளன. காலப் போக்கில் கடவுளர்களுக்கு . இடையே உறவுமுறைகள் கற்பிக்கப்பட்டன. சிவன் துணைவியாக உமையும், பிள்ளைகளாக முருகன், விநாயகர் இருவரும் கொள்ளப்பட்டனர். கி.பி.ஏழாம் நூற்றாண்டு தொடங்கி சிவன், உமை, முருகன், விநாயகர் வழிபாடுகள் ஒன்றாய்க் கலந்தன.

சைவத்தமிழ் இலக்கியங்கள், தமிழ் மொழியில் புதிய இலக்கிய வகைகள் தோன்றுவதற்கு உதவின. தமிழ் யாப்பியல் வளர்ச்சியில் இவை பெரும்பங்காற்றியுள்ளன. தமிழ் இசை வளர்ச்சிக்கும் இவ்விலக்கியங்கள் துணை நின்றன. தமிழ்நாட்டின் இரண்டாயிரம் ஆண்டுக் கால சமய வரலாற்றையும், சமூக வரலாற்றையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பை இவை வழங்கின.

சைவத்தமிழ் இலக்கியங்கள் நிறைவாக உள்ளன. அவை எல்லாவற்றையும் பற்றி இங்கே விளக்கம் தரப்படவில்லை.

## பழந்தமிழ் நூல்களில் சைவம்

பழந்தமிழ் நூல்களில் சைவ சமயக் குறிப்புகள் மிகச் சிலவே கிடைத்துள்ளன. இக்காலப்பகுதியில் அகம், புறம் பற்றியே பாடல்கள் எழுந்தன. திருமுருகாற்றுப்படையைத் தவிர குறிப்பிடத்தக்க சமய நூல் இக்காலப் பகுதியில் தோன்றவில்லை. தொல்காப்பியத்தில், ஒரு சில கடவுளரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. பிற்காலச் சைவ சமய இலக்கியங்களில், சைவ சமயக் கடவுளர் குறித்து வரும் செய்திகளோடு பொருந்தி வரும் சில அரிய தொடர்கள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் கொற்றவை, முருகன் குறித்த இசைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.பிற்காலத்தில்



www.saivamonline.com

சைவ சமய இலக்கியங்கள் பல தோன்றுவதற்குப் பழந்தமிழ் நூல்கள் துணை செய்தன.

## சைவ சமயம் - விளக்கம்

இந்திய நாட்டுச் சமயங்கள் பலவற்றுக்கும் மூல நூல்கள் வேதங்கள் ஆகும். வேதங்களை ஏற்றுக்கொண்ட சமயங்கள், வைதிக சமயங்கள் எனப்பட்டன. அவற்றுள் தலையாய சிறப்புடையன சைவமும், வைணவமும் ஆகும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு தோன்றிய சமயம் சைவம். இது காலப் பழமைமிக்கது. வேதங்களோடு, சிவ ஆகமங்களும் சைவத்தின் முதல் நூல்களாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. வேத ஆகமங்களை இறைவன் நூல் என்று முன்னோர் குறித்துள்ளனர்.

## சைவ மரபுகள்

சைவ சமயத்தில், மூன்று பொருள்கள் முதன்மையாகக் கொள்ளப்படுகின்றன. அவை முறையே இறை, உயிர், தளை என்பன. சாத்திர நூலாசிரியர்கள் இவற்றை வடமொழியில் பதி, பசு, பாசம் எனக் குறித்துள்ளனர். சிவ வழிபாடு மூன்று நிலைகளைக் கொண்டது. அவை உருவமற்றநிலை. உருவ நிலை, இரண்டும் கலந்த நிலை என்பன. இவற்றை முறையே அருவம், உருவம், அருவுருவம் என்பர் சாத்திர நூலாசிரியர். சிவலிங்க வழிபாடு அருவுருவ நிலையே என்று கூறப்படுகிறது. சைவத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்பு நிலைகள் பேசப்பட்டுள்ளன. இறைவன் சிறப்புற்றிருக்கும் நிலை மூர்த்தி வழிபாடு எனப்படும். நீர் நிலை சிறப்புற்றிருக்கும் இடங்களில் நீராடி வழிபடுவது தீர்த்த வழிபாடு என்று பேசப்படும். இறைவன் எழுந்தருளி இருக்கும் ஊர் சிறந்திருக்கும் நிலையில் அங்கே சென்று வழிபடுவது தல வழிபாடு என்று கூறப்படும்.



www.saivamonline.com

## சிவன் அடையாளங்கள்

சிவபெருமான் கொண்ட திருமேனி வடிவங்களைச் சிவமூர்த்தங்கள் என இருபத்து ஐந்தாகக் குறிப்பர். சிவன் நிகழ்த்திய வீரச் செயல்கள் எட்டு என்பர். இத்தகு வீரம் நிகழ்த்திய தலங்கள் அட்டவீரட்டத் தலங்கள் எனப்படும். சிவபெருமானின் வடிவத் திருமேனி பற்றி ஆகமங்களும் வேதமந்திரங்களும் பல குறிப்புகளைத் தருகின்றன. அவன் சடாமுடி உடையவன். அதன் மீது பாம்பு, பிறைச்சந்திரன், கங்கை நதி மூன்றும் நிலைபெற்றுள்ளன. அவன் மூன்று கண்களை உடையவன். அவன் கழுத்து நீலநிறம் உடையது. அவன் எட்டுத் தோள்களை உடையவன். இடப்பாகத்தில் உமையைக் கொண்டுள்ளான். பாம்புகளைஅணிகலன்களாகக் கொண்டவன். புலித்தோல் ஆடை உடையவன். கையில் சூலாயுதம் தாங்கியவன். கொன்றை மலர் அவனுக்கு விருப்பமானது. சுடுகாட்டுச் சாம்பலை அவன் உடலெங்கும் பூசி மகிழ்பவன். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலுக்கும் அவனே முதல்வன். பூதகணங்களைப் படையாகக் கொண்டவன். மேற்குறித்த செய்திகள் யாவும் சைவத் தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே சுட்டப் பெற்றுள்ளன.

## சைவம் - வாழ்வியல்

சைவ சமயத்தைப் பின்பற்றி வாழ்பவர்களுக்குச் சில கடமைகளைச் சைவ நூல்கள் வரையறுத்துள்ளன. இறைவனுக்கு மலர் தூவி வழிபடுதல், இது சமயம் சார்ந்த சடங்கைக் குறித்து நிற்கிறது. இரண்டாவது, சிற்றுயிர்களிடம் கருணை கொண்டு வாழ்வது. இதனை உயிர் இரக்கம் என்பர். பிற்காலத்தார் வடமொழியில் இதனையே ஜீவகாருண்யம் என்றனர். மூன்றாவது, அடுத்த மனிதன் பசித்திருக்கும்போது அவனை உண்பித்து அறந்தலை நிற்பது. நான்காவதாகப் பேதம்



www.saivamonline.com

இல்லாது எல்லாரிடமும் இன்சொல்பேசி, பண்பாடு காத்து வாழ்வது. இவற்றை முறையே, வழிபாடு, உயிர் இரக்கம், மனித நேயம், பண்பாடு என்று கொள்ளுதல் பொருத்தமாகும். இவற்றை உள்ளடக்கி நிற்கும் அரிய பாடல் ஒன்று திருமூலரின் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளது.

யாவர்க்கும் ஆம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தாமே

இவ்வழகிய பாடல், சமயம் என்பது சடங்குகளைக் கடந்த, வேறு உயரிய வாழ்க்கை முறைகளையும் கற்பிக்கும் பெருநெறி என்பதை அறிவித்து நிற்கிறது.

## சைவத்தின் உட்பிரிவுகள்

சிவனை வழிபடும் நெறி சைவம் என்பது முன்னரே கூறப்பட்டது. சங்ககாலத்தில் தமிழ் மக்கள் சிவன், உமை, கொற்றவை, முருகன், திருமால், இந்திரன்,வருணன் முதலிய கடவுளர்களை வழிபட்டு வந்துள்ளனர். விநாயகர் வழிபாடு அக்காலத்தில் இருந்திருக்கவில்லை. சூரியனை வழிபடும் வழக்கமும் நிலவியிருந்தது. ஆதிசங்கரர் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் மேற்குறித்த வழிபாட்டு நெறிகளை எல்லாம் தொகுத்து அறுவகைச் சமயங்களை முன்நிறுத்தினார். அவை சிவனை வழிபடும் சைவம், திருமாலை வழிபடும் வைணவம், சக்தியை வழிபடும் சாக்தம், சூரியனை வழிபடும் சௌரம், முருகனை வழிபடும் கௌமாரம், கணபதியை வழிபடும் காணாபத்தியம் என்பன. இவற்றுள் சூரிய வழிபாடு தமிழகத்தில் தனிநெறியாக வளரவில்லை. எனவே, இந்நெறி குறித்த இலக்கியங்களும் தமிழில் உருவாகவில்லை. வைணவம் தனி நெறியாக இலக்கிய வளத்துடன் சிறந்துள்ளது.



www.saivamonline.com

## சைவக் கடவுளர்கள்

சௌரம், வைணவம் என்ற இரண்டையும் தவிர்த்து ஏனைய நான்கு நெறிகளும், பிற்காலத்தில் ஒன்றாக இணைந்து சைவநெறியாகவே போற்றப்பட்டன. உமை சிவனின் துணைவியாகவும், முருகன் மகனாகவும், விநாயகர் மூத்த பிள்ளையாகவும் உறவு முறை கற்பிக்கப்பட்டனர். சிவனின் அருளைச் சக்தியாகவும், ஆற்றலை முருகனாகவும், விரைந்து அருளும் திறத்தை விநாயகனாகவும் முன்னோர் உருவகித்து உரைத்தனர். இந்நான்கு கடவுளர்கள் மீதும் தனித்தனி இலக்கியங்களும் தனிப்பாடல்களும் தோன்றின. ஒருவரோடு ஒருவருக்கு உறவுமுறை கற்பித்தும் இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. ஆயினும், சைவமும் தமிழும் என்ற தலைப்பில் இந்நான்கு தெய்வங்கள் குறித்து எழுந்த இலக்கியங்கள் பலவும் ஒன்றாகவே கருதப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

## தொல்காப்பியத்தில் சைவம்

இடைச்சங்க காலத்தில் தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூல் கி.மு. 700 க்கு முற்பட்டது என்பர் ஆய்வாளர். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. மூன்றாவதாகிய பொருளதிகாரத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களுக்கும் உரிய கடவுளரைக் குறித்த நூற்பா ஒன்று உள்ளது.அது வருமாறு.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே



www.saivamonline.com

இதில் மலையும், மலை சார்ந்த பகுதிகளுமாகிய குறிஞ்சி நிலத் தெய்வமாகச் சேயோன் என்ற சொல்லால் முருகன் குறிக்கப்பட்டுள்ளான். சிவன் பற்றிய நேரடியான பதிவு இதில் இல்லை. நிலத் தெய்வங்களுக்கு மேலான தெய்வம் சிவன் என்பதால், சிவன் பெயர் இங்கே இடம்பெறவில்லை என்று சைவ நூல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## தொல்காப்பியத்தில் வேதக் குறிப்புகள்

சைவம்- சிவன் பற்றிய நேரடியான குறிப்புகள் தொல்காப்பியத்தில் இல்லை. என்றாலும், சைவ சமயத்தின் முதல் நூல்களாகிய வேதங்கள் பற்றிய குறிப்புகள் இந்நூலுள் உள்ளன. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் எழுத்துக்கள் பிறத்தல் தொடர்பான புற நடைகளில் , 'எல்லா எழுத்தும்' என்று தொடங்கும் நூற்பாவில்,

அளவில் கோடல் அந்தணர் மறைத்தே

என்ற தொடர் வருகிறது. இதில் வரும் அந்தணர் மறை என்பது வேதத்தைக் குறிப்பதேயாகும். மேலும் பொருளதிகாரத்தில் காமப்புணர்ச்சி இலக்கணக் குறியீடு உணர்த்தும், 'இன்பமும் பொருளும் என்று தொடங்கும் நூற்பாவில்,'

மறையோர் தேஎத்து மன்றல் எட்டு

என்ற தொடர் இடம் பெற்றுள்ளது. இங்கேயும் மறை என்ற சொல்லால் வேதமே குறிக்கப்பட்டுள்ளது.

## தொல்காப்பியத்தில் சிவன்-சக்தி

தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணை இயலுள் பாடாண் திணைக்கு உரிய மரபு கூறும் ஒரு நூற்பா அமைந்துள்ளது. அது,

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்



www.saivamonline.com

கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே

என அமைந்துள்ளது. இதில் இடம் பெற்றுள்ள கந்தழி என்றசொல் சிவனைக் குறித்து வந்துள்ளது என்பர் சில ஆய்வாளர்கள். மேலும், புறத்திணை இயலுள் வெட்சித்துறை உணர்த்தும் ஒரு நூற்பாவில், கொற்றவை பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே

கொற்றவை நிலை, என்ற தொடரில் சிவசக்தி பேதங்களில் ஒன்றாகிய கொற்றவை குறிக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

## சங்கநூல்களில் சிவன்

கடைச் சங்க நூல்கள் என்பன பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமாகிய பதினெட்டு நூல்களையே குறித்து நிற்கும்.முன் குறித்தவாறு சிவன் என்ற சொல்லாட்சி இந்நூல்களில் இல்லை. ஆயினும், பிற்காலச் சைவ இலக்கியங்களுள், சிவனுக்கு உரியனவாகக் குறிக்கப்படும் பலவகை இலக்கணங்களோடு ஒத்த தொடர்கள், இந்நூல்களுள் இடம் பெற்றுள்ளன. சில கடவுள் வாழ்த்துப் பாடல்களும் உள்ளன.இவை சங்க காலத்தில் நிலவியிருந்த சிவவழிபாட்டிற்குச் சான்றாக அமைகின்றன.அவற்றுள் ஒரு சில பாடல்களையும் தொடர்களையும் காணலாம். அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, கலித்தொகை ஆகிய ஐந்து எட்டுத்தொகை நூல்களின் கடவுள் வாழ்த்துப்பாடல்கள் சிவனைக் குறித்து அமைந்துள்ளன. ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவரால் பாடப் பெற்றுள்ளது.

நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்



www.saivamonline.com

மூவகை உலகும் முகிழ்த்தன முறையே

உமையோடு சிவன் ஆடிய கொடு கொட்டி, பாண்டரங்கம், கபாலம் எனப்படும் மூவகைக் கூத்துக்களைக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்து விரித்துரைக்கிறது. சிவன் அடையாளங்கள் பலவற்றையும் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து விளக்கி நிறைகிறது. அகநானூற்று வாழ்த்து,

மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொல்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்

என, எவராலும் முற்றாக அறியப்படாத சிவன் சிறப்பை எடுத்துரைக்கிறது.

## சிவன் அடையாளங்களும் ஆற்றல்களும்

சிவனை அருந்தவத்தோன் என்றும், ஆதிரை நாளை உகந்தவன் என்றும் தொகை நூல்கள் குறிக்கின்றன. சிவன் தலையில் கங்கை தங்கியிருத்தல், அவன் கழுத்தில் நீல நிறம் இடம் பெற்றிருத்தல் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. சிவனுக்கு உரிய ஆயுதம், ஊர்தி, கொடி முதலியன பற்றியும் செய்திகள் உள்ளன. சிவன் திருமுடியில் பிறை சூடியிருப்பதும், அவன் புலித் தோல் ஆடை அணிந்திருப்பதும், கையில் மழுப்படை ஏந்தியிருப்பதும் , சிவன் முப்புரம் எரித்ததும் முதலாய பல அரிய செய்திகளைச் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. பிற்காலத்தே சைவத் தமிழ் இலக்கியங்கள் பலவும் தோன்றுவதற்கு இத்தகு குறிப்புகள் உந்துதலாக இருந்திருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது.

## சங்க நூல்களில் உமை

பத்துப்பாட்டின் கடவுள் வாழ்த்தாகக் கருதத்தக்கது



www.saivamonline.com

திருமுருகாற்றுப்படை. இந்நூலுள், உமையை ஆசிரியர் பல்வேறு பெயர்களில் அடையாளப்படுத்தியுள்ளார். முருகனை உமையவள் மகன் என்று குறித்துக்காட்டும் நக்கீரர்,

மால்வரை
மலைமகள் மகனே: மாற்றோர் கூற்றே;
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ:
இழையணி சிறப்பின் பழையோள் குழவி

எனவரும் தொடர்களில் உமையை மலைமகள், கொற்றவை, பழையோள் என்ற பெயர்களால் குறித்துச் சென்றுள்ளார். கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் உமை, கொடிபுரை நுசுப்பினாள்; வண்டரற்றும் கூந்தலாள்; முல்லையணிந்த முறுவலாள் என வருணிக்கப்பட்டுள்ளாள்.

## உமை இலக்கணம்

பரிபாடலில் எழுபது பாடல்கள் தொகுக்கப் பட்டதாகவும், தற்போது இருபத்திரண்டு பாடல்கள் மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் குறித்துள்ளனர். இதில் காடுகிழாள் எனக் குறிக்கப்படும் உமைக்கு ஒரு இசைப்பாடல் இருந்ததாகவும், அப்பாடல் இன்று கிடைக்கப்பெறவில்லை என்றும் தெரிகிறது. பெண் உரு ஒரு திறம் ஆகின்று. என்ற புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தில், உமை, சிவனின் இடப்பாகத்தில் இருத்தல் குறிக்கப்பட்டுள்ளது. ஊர்ந்தது ஏறே; சேர்ந்தோள் உமையே என்று அகநானூற்றுக் கடவுள் வாழ்த்தில் ஒரு தொடர் வருகிறது. சிவனோடு இணைந்து உலகத்தைக் காப்பவள் உமையே என்பதை கலித்தொகைக் கடவுள் வாழ்த்து,

பாணியும் தூக்கும் சீரும் என்றிவை
மாணிழை அரிவை காப்ப



www.saivamonline.com

வாணமில் பொருள் எமக்கு அமர்ந்தனை ஆடி

எனக் கூறி நிறைவிக்கிறது.

## சங்க நூல்களில் முருகன்

கடைச்சங்க இலக்கியங்களுள் முருகன் பற்றிய குறிப்புகளே அதிகமாகக் காணப்படுகின்றன. திருமுருகாற்றுப் படை தரும் முருகன் பற்றிய செய்திகள், சங்க காலத்தில் சிறந்திருந்த முருக வழிபாட்டிற்குச் சான்று கூறி நிற்கின்றன. திருமுருகாற்றுப்படை முருகன் எழுந்தருளியிருந்த இடங்களை அறுபடை வீடு என்று குறித்துக் காட்டுகிறது. அவை, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), ஏரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல்(பலமலைத் தலங்கள்), பழமுதிர்சோலை என்பன. திருமுருகாற்றுப் படை 317 வரிகளைக் கொண்டுள்ளது. இந்நூலின் நிறைவில் முருகனை வாழ்த்தும் நோக்கில் அமைந்த பத்து அழகிய வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றைத் தமிழில் எழுந்த முருகன் பற்றிய முதல் துதிப் பாடல்கள் என்று கருதலாம். முருகன் அருளும் திறத்தை,

அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்

என்ற பாடலும், முருக அடியார்களின் உறுதிமிக்க பத்திமைச் சிறப்பை,

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரை யான்பின் செல்லேன்-பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ்வே



www.saivamonline.com

என்ற பாடலும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

## பரிபாடலில் முருகன்

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலில் முருகன் குறித்துப் பாடப்பெற்ற அழகிய, நீண்ட எட்டு இசைப்பாடல்களைக் கடுவன் இளவெயினனார், ஆரியன் நல்லந்துவனார், குன்றம்பூதனார், நல்லழிசியார், நப்பண்ணனார், நல்லச்சுதனார் ஆகியோர் பாடியுள்ளனர். இப்பாடல்களுக்கு அக்காலத்திலேய தக்க சைவாணர்களால் இசையமைக்கப்பட்டுள்ளது. பாடல்களுக்கு உரிய பண் அடைவுகளும் குறிக்கப்பட்டுள்ளன. சைவ-இலக்கிய இசைப்பாடல்களில், தேவாரப்பாடல்களுக்கு இவையே முன்னோடிகள் என்பது அறியத்தக்கது. முருகன் பிறப்பு, உருவ அமைப்பு, அவன் நிகழ்த்திய போர்கள், அவன் தேவியர், அவன் அருளும் திறம் யாவும் இப்பாடல்களுள் நிறைவாக இடம் பெற்றுள்ளன.

யாஅம் இரப்பவை
பொன்னும் பொருளும் போகமும் அல்ல! நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே

என்ற பரிபாடல் வரிகள், சங்க காலத் தமிழர் வழிபாடு, பொருள் நாட்டம் இல்லாது, பண்புகளை நாடும் சிறப்புடையதாய்த் திகழ்ந்தமையை அடையாளம் காட்டி நிற்கிறது.

## குறுந்தொகை - கடவுள் வாழ்த்து

கடைச்சங்க இலக்கியங்களுள் முருகன் தொடர்பான குறிப்புகள் நிறைவாக இடம் பெற்றுள்ளன. அரிய பல தொடர்களும் காணப்படுகின்றன. குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து முருகனைச் சிறப்பித்துக் கூறுவது, பாரதம் பாடிய



www.saivamonline.com

பெருந்தேவனார் பாடியது. இப்பாடலில், முருகன் திருமேனி அழகு, அவன் தன் கை வேலால் குன்றைத் துளைத்தமை, அவனது சேவல், கொடி முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

தாமரை புரையும் காமர் சேவடி
பவழத்து அன்ன மேனி, திகழ்ஒளி
குன்றி ஏய்க்கும் உடுக்கை, குன்றின்
நெஞ்சு பக எறிந்த அம்சுடர் நெடுவேல்
சேவல் அம் கொடியோன் காப்ப,
ஏம வைகல் எய்தின்றால் உலகே

என்பது அவ்வழகிய பாடல்.

## பதிற்றுப்பத்துள் முருகன்

முருகன் அசுரரை அழித்தமை, கிரவுஞ்ச மலையைப் பிளந்தமை, சேவல் கொடியைப் பெற்றமை, சூரனை வென்றமை, தேவர்கள் சேனைத் தலைவனாகத் திகழ்ந்தமை, தேவர் துயர் தீர்த்தமை, முருகன் பிறப்பு வரலாறு, மயில் ஊர்தியை அடைந்தமை, மாமரம் தடிந்தமை, வள்ளியை மணம் முடித்தமை முதலிய பல செய்திகளைச் சங்க நூல்கள் பதிவு செய்துள்ளன. முருகன் கடல் நடுவே சென்று சூரனை வெற்றி கொண்ட திறத்தை,

நளி இரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேர் இசை
கடுஞ்சின விறல் வேள்

என்று பதிற்றுப்பத்துள் ஒரு பாடல் எடுத்துக் காட்டுகிறது. பிற்காலத்தில் எழுந்த முருக இலக்கியங்களுக்கு இத்தகு பதிவுகள் பெரிதும் ஊற்றமாக அமைந்தன. கடைச்சங்க காலக் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு. இவை பெரும்பாலும் அறம் உரைப்பன. சமண ஆசிரியர்களால் பாடப்பெற்றன. சைவசமயம் சார்ந்த தனிப்பாடல்களோ, அரிய தொடர்களோ



www.saivamonline.com

இவற்றுள் காணப்படவில்லை.

## காப்பியங்களில் சிவன்

தமிழின் முதல் காப்பியம் சிலப்பதிகாரம். சமணசமயத் துறவி இளங்கோவடிகளால் இந்நூல் இயற்றப்பட்டது . என்றாலும், வேத வழிப்பட்ட வைதிக சமயங்களைப் பற்றிய அரிய குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டு மக்கள் தங்களுக்குள் சமய பேதங்கள் ஏதுமின்றி, அவரவர் போக்கில் வழிபாடுகளை நிகழ்த்தி வந்துள்ளமையை இந்நூலால் உணர முடிகிறது. சிவன், கொற்றவை, முருகன் தொடர்பான பல குறிப்புகளும், அரிய இலக்கியத் தரம் மிகுந்த பாடல்களும் இதில் இடம் பெற்றுள்ளன. கோவலன், கண்ணகி அழகைப் புகழ்ந்து பேசும், மனையறம் படுத்த காதையில்,

குழவித் திங்கள் இமையவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்
உரிதின் நின்னோடு உடன்பிறப்பு உண்மையின்
பெரியோன் தருக திருநுதல் ஆக

எனவரும் பகுதியில், சிவனை இளங்கோவடிகள் பெரியோன் எனச் சுட்டுகிறார். பூம்புகாரில்,

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்

இருந்ததாகவும் அவர் பதிவு செய்கிறார். சிவனைப் பிறவா யாக்கைப் பெரியோன் என்று சுட்டுவது கருதத்தக்கது.

## சிலம்பில் கொற்றவை

சிலப்பதிகாரத்தின், வேட்டுவ வரி என்ற பகுதியில் கொற்றவை வழிபாடு பற்றிய பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. அம்மை, கலையமர் செல்வி



www.saivamonline.com

என்று குறிக்கப்படுகிறாள். அம்மைக்குச்செய்யப்படும் அலங்காரங்களும், கொற்றவைக்குப் படையல் இடப்படும் உணவு வகைகளும் இங்கே தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன. சிவனுக்கு உரிய அடையாளங்கள் பலவும் கொண்டவளாகக் கொற்றவை திகழ்கிறாள். அதனை,

மதியின் வெண்தோடு சூடும் சென்னி
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளை எயிற்று உரகக் கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையில் சூலம் ஏந்தி
கரியின் உரிவை போர்த்து அணங்கு ஆகிய
அரியின் உரிவை மேகலை ஆட்டி
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை

என்று விரிவாக இளங்கோவடிகள் எடுத்துரைக்கிறார்.

## உமை - பல பெயர்கள்

சிவன், உமை, முருகன் முதலியோருக்குப் பல பெயர்கள் உண்டு.பிற்காலச் சமய நூல்கள் இப்பெயர்களை எடுத்துரைத்து, வழிபாட்டுக்கு உரிய போற்றிப் பாடல்களை வகுத்துத் தந்தன. பதினெட்டு, நூற்றி எட்டு, ஆயிரத்து எட்டு என்று இப்போற்றிகள் தொகுக்கப்பட்டன. இவ்வகையில், உமை பற்றிய போற்றிப் பாடல்கள் உருவாவதற்குச் சிலப்பதிகார வேட்டுவ வரியில் பல குறிப்புகள் துணை நின்றமையை அறிய முடிகிறது.

அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற்கு இளங்கிளை



www.saivamonline.com

ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை
தமர் தொழ வந்த குமரிக் கோலத்து
அமரிளம் குமரி...

என்று அடுக்கப்படும் உமையம்மையின் பல்வேறுதிருப் பெயர்கள் பிற்காலத்தே அர்ச்சனைக்கு உரிய மந்திரங்களில் இடம் பெற்றிருத்தலைக் காண முடிகிறது.

## கொற்றவை : இசைப் பாடல்கள்

முல்லையும் குறிஞ்சியும் வளங்குறைந்தபோது, பாலை நிலமாகத் தோற்றம் தரும். அத்தகு பாலை நிலத் தெய்வம் கொற்றவை. இந்நிலத்து வாழும் எயினர் என்ற மக்கள், கூட்டமாகக் கூடி நின்று, கொற்றவையை முன்னிலைப்படுத்தி பாடியும் ஆடியும் வழிபடுதல் உண்டு என்பது வேட்டுவவரி என்ற பகுதியில் தெரிய வருகிறது. உரைப்பாட்டு மடை, வள்ளிக்கூத்து, முன்னிலைப் பரவல், வென்றிக்கூத்து,கூத்துட்படுதல், அவிப்பலி என்ற உட் தலைப்புகளில், கொற்றவை புகழ்பாடும் இசை மற்றும் கூத்துக்கு உரிய 21 இசைப் பாடல்கள் இங்கே காணப் படுகின்றன.

உமை தொடர்பான முதல் இலக்கியப் பதிவாக இப்பகுதி அமைந்துள்ளது. முன்னிலைப் பரவல் என்ற பகுதியில்,

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுகின்றியே நிற்பாய்

என்ற அழகிய, கொற்றவையைப் புகழ்ந்து பாடும் பாடல் அமைந்துள்ளது.



www.saivamonline.com

## உமை- திருமால் உறவு முறை

உமை பற்றிய புராண வரலாறுகளும், பிற தெய்வங்களுடைய உறவு முறைகளும், அவள் பகை அழித்த திறமும், உமையின் கருணைத் திறமும் பல பாடல்களில் விளக்கப் பெற்றுள்ளன. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் செய்யும் இறையவர்களுக்கும் மேலானவளாக, அன்னோர் நெஞ்சில் உமை ஒளிமிக்க தீபமாக நின்று ஒளி செய்கிறாள் என்று இளங்கோவடிகள் சிவசக்தியின் சிறப்பு உரைக்கிறார்.

*அரி அரன் பூமேலான் அகமலர்மேல் மன்னும்*
*விரிகதிர் அம்சோதி விளக்காகியே நிற்பாய்*

என்பது எயினர்கள் பாடிய தோத்திரங்களுள் ஒன்றாக அமைந்துள்ளது. உமையை, திருமாலின் தங்கை என்று கூறுவது சமய மரபு. சிலம்பு இச்செய்தியை உரைக்கும்போது உமையைத், திருமாற்கு இளையாள் என்று உறவுமுறை காட்டுகிறது. சிவன், திருமால் என்ற இரு கடவுளர்களோடும், உமையைத்தொடர்பு படுத்திச் சமய சமரசம் காட்டுகிறார் இளங்கோவடிகள்

*சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்*
*செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்*
*கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து*
*மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய்*

திருமால் கையில் நிற்கும் சங்கு சக்கரங்கள், உமையின் கைகளிலும் இடம்பெற்றிருப்பதாகக் கூறுவது அரிய செய்தியாக உள்ளது.

## உமை- பகையழித்த திறம்

சிலம்பில் இடம் பெற்றுள்ள வழக்குரை காதையில், உமை பகை அழிக்க எடுத்த பல வடிவங்கள் பற்றிய



www.saivamonline.com

குறிப்புகள் காணப்படுகின்றன. சினத்துடன் ஒற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தி, தலைவிரிகோலமாய் அரண்மனை வாசலில் வந்து நின்ற கண்ணகியைக் கண்டு நடுக்கம் உற்ற வாயிற்காவலன், உரைப்பதாக அமைந்தள்ள ஒருபகுதியில், உமையின் வீரச் செயல்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன.

அடர்த்து எழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
அறுவர்க்கு இளைய நங்கை; இறைவனை
ஆடல் கண்டு அருளிய அணங்கு; சூருடைக்
கானகம் உகந்த காளி; தாருகன்
பேருரம் கிழித்த பெண்...

என்று தொடரும் வழக்குரை காதைப் பகுதியில், உமை பற்றிய பழைய வீர வரலாறுகள் இனங்காட்டப்பட்டுள்ளன. இப்பகுதியில் உமை, மகிடாசுரமர்த்தினி, பிடாரி, பத்திரகாளி, துர்க்கை என எடுத்த வீரம் செறிந்த கோலங்கள் இனங்காட்டப்பட்டுள்ளன. 1800 ஆண்டுகளுக்கு முன்னரே உமை தொடர்பான, புராணச் செய்திகள் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிலம்பில் முருகன்

சிலப்பதிகாரத்தின் மூன்றாவது பகுதி, வஞ்சிக் காண்டம் என்று பெயர் பெறும். இக்காண்டத்தின் முதல் காதை, குன்றக் குரவை என்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில், குறிஞ்சி நில மக்களாகிய குன்றக்குறவர் மேற்கொண்ட தெய்வ வழிபாட்டு முறைமைகளும், முருகனை அவர்கள் புகழ்ந்து பாடிய இசைப்பாடல்களும் நிறைவாக இடம் பெற்றுள்ளன. முருகன் மாமர வடிவில் நின்ற சூரனைத் தடிந்த செய்தி, "உரவு நீர் மா கொன்ற வேல் ஏந்தி" என்ற தொடரால் குறிக்கப்பட்டுள்ளது. அவன் கை வேல்,



www.saivamonline.com

பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டு ஒருநாள்
சூர் மா தடிந்த சுடர் இலைய வெள்வேல்

என்று குறிக்கப்பட்டுள்ளது. குருகு பெயர் குன்றம் என்று குறிக்கப்படும், கிரவுஞ்ச மலையை முருகன் அழித்த திறம்

வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேல்

என்பதால் விளக்கப் பெற்றுள்ளது.

## புராண வரலாறுகள்

பாட்டுமடை என்ற பகுதியில், முருகன் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் செய்யும் தலங்கள் பற்றிய குறிப்பும், அவன், ஆறு முகங்களும், பன்னிரு கைகளும் கொண்டவன் என்ற செய்தியும், அவன் கார்த்திகைப் பெண்டிரிடம் பாலுண்டவன் என்ற புராண வரலாறும் காணப்படுகின்றன.

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்

என்றும்,

அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான்

என்றும்,

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப்பால் உண்டான்

என்றும், வரும் பகுதிகள், முருகன் அருள் வரலாற்றின் அரிய பதிவுகளாக அமைந்துள்ளன.

## பிற காப்பியங்களில் சிவன்

சிலப்பதிகாரத்துடன் தொடர்புடையது மணிமேகலை.



www.saivamonline.com

இந்நூல், சீத்தலைச் சாத்தனார் என்பவரால் இயற்றப்பட்டது. பௌத்தம் சார்ந்து வாழ்ந்த, மாதவிமகள் மணிமேகலை என்பாளின் வரலாறு கூறுவது. சிலப்பதிகாரத்தைப் போல் சமயம் சார்ந்த செய்திகள் இலைமறை காயாக இந்நூலுள் கூறப்பட்டிருக்கவில்லை. நேரடியாகவே இந்நூல், பௌத்த மதச் சிறப்புரைக்கும் போக்கில் அமைந்துள்ளது. அக்காலத்தே பூம்புகாரில் வாழ்ந்திருந்த, பல்வேறு சமயவாதிகளையும், அவர்தம் சமயக் கொள்கைகளையும், அவர்கள் தம்முள் நிகழ்த்திக் கொண்ட சமயம் சார்ந்த வாக்கு வாதங்களையும் இந்நூல் எடுத்துரைக்கிறது. மணிமேகலை தோன்றிய காலப் பகுதியிலேயே, வழிபாட்டுச் சமயமாக இருந்த சைவம், தத்துவச்சமயமாக உருப்பெற்றுவிட்டமையை இந்நூல் வழி அறிய முடிகிறது. சீவக சிந்தாமணியில், வேதவழிப்பட்ட சமயங்கள்குறித்த, சில குறிப்புகள் மட்டுமே காணப்படுகின்றன. வளையாபதி, குண்டலகேசி என்பவை முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, சைவம் பற்றிய ஆய்வுக்கு இக்காப்பியங்கள் இடம் தரவில்லை.

## கல்லாடம்

சைவத் தமிழ் இலக்கிய வரிசையில் குறிப்பிடத்தக்க பழமையான நூல் கல்லாடம். 'கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே' என்பது, இந்நூலைக் கற்றாரின் ஆற்றலை விளக்கும் ஒரு பழமொழி. கல்லாடர் என்பார் இந்நூலை இயற்றினார். இந்நூல் கடைச்சங்க காலத்திற்கும், தேவார ஆசிரியர்கள் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியைச் சார்ந்தது. பிற்காலத்தில், சைவசமயம் சார்ந்த, கோவை நூல்கள் தோன்றுவதற்குக் கல்லாடம் வழி வகுத்தது. நூறு அகப்பொருள் துறைகளை விளக்கும் போக்கில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல், மதுரையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களையும், நகரச் சிறப்புக்களையும் விரித்துரைக்கிறது. திருமுருகாற்றுப்



www.saivamonline.com

படையை முதல் முருக இலக்கியமாகக் கொள்வது போல், சிவன் சிறப்புரைக்கும் முதல் இலக்கியமாக இதனைக் கருதலாம். இந்நூல் அரங்கேற்றம் நிகழும்போது, சிவன், இந்நூலைக் கேட்டுத் தம் முடியை அசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் என்று ஒரு வெண்பா எடுத்துரைக்கிறது.

## கல்லாடத்தில் விநாயகர்

சங்க இலக்கியங்களில் காணப்படாத விநாயகர் துதி முதன்முதல் இந்நூலுள் காணப்படுகிறது. திங்கள் முடிபொறுத்த என்று தொடங்கி இப்பாடல் 40 வரிகளுடன் நிறைகிறது. விநாயகன் திருமேனி அமைப்பும், அவன் சிவன் மகன் என்பதுவும், அவன் ஆற்றல்களும், அருளிப்பாடுகளும், மாங்கனி பெற வேண்டிப் பெற்றோரை வலம் வந்த வரலாறும் பிறவும் இப்பாடலில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இதுபோல முருகனுக்கும் ஒரு வாழ்த்துப் பாடல் இந்நூலுள் இடம் பெற்றுள்ளது. பாய்திரை உடுத்த ஞாலம் என்று தொடங்கும் இப்பாடல் 65 வரிகளைக் கொண்டது. முருகன் அழகும், ஆற்றலும், அருளிப்பாடும் இதனுள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

## கல்லாடத்தில் சிவன்

சிவன் பெருமைபேசும் இந்நூலுள்,சிவன் தொடர்பான பல புராணச் செய்திகள் பதிவு செய்யப்பெற்றுள்ளன. தருமிக்கு மதுரை இறைவன் பொற்கிழி அளித்த வரலாறு,

> கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
> பொற்குவை தருமிக்கு அற்புடன் உதவி
> என் உளம் குடிகொண்டு.இருபயன் அளிக்கும்
> கள் அவிழ் குழல்சேர் கருணை எம்பெருமான்

எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிவனே, மதுரையில் சவுந்தரபாண்டியன் என்ற பெயரில், முடிபுனைந்து ஆட்சி



www.saivamonline.com

செய்தான் என்பதை,

> பெருநீர் வையை வளைநீர்க் கூடல்
> உடல்உயிர் என்ன உறைதரு நாயகன்
> கடுக்கை மலர் மாற்றி வேப்பு அலர் சூடி
> ஐவாய்க் காப்புவிட்டு அணிபூண் அணிந்து
> விரிசடை மறைத்து மணிமுடி கவித்து
> விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி எடுத்து
> வழுதி யாகி முழுது உலகு அளிக்கும்
> பேரருள் நாயகன்

என்ற வரிகளால், கல்லாடர் பதிவு செய்கிறார். சைவத்தமிழ் இலக்கிய வரலாற்றில், இந்நூல், காலப்பழமையும் சாலப் பெருமையும் கொண்டு விளங்குகின்றது.

## அரிய கொடைகள்

சைவமும் தமிழும் என்ற இத்தலைப்பில், தொல்காப்பியம் தொடங்கிக் கல்லாடம் வரையிலான நூல்களில் காணப்படும் சைவம் பற்றிய அரிய குறிப்புகள் திரட்டி வழங்கப்பட்டுள்ளன. பிற்காலத்தே, சைவத் திருமுறைகளும், சிற்றிலக்கியங்களும் தோற்றம் கொள்வதற்கு உரிய ஊற்றத்தை,இவை வழங்கியுள்ளமை கண்டு காட்டப்பட்டது. சைவமும் தமிழும் என்ற பகுப்பில் சிவன், உமை, முருகன், விநாயகர் முதலிய கடவுளர்கள் தொடர்பாக எழுந்த தனிப்பாடல்களும், நூல்களும், ஒன்றாகவே ஆராயப்பட்டுள்ளன. முருக வழிபாடு முதன்மை பெற்றிருந்தமை நன்கு புலனாயிற்று. சக்தி வழிபாடும் சிறந்திருந்தது. விநாயகர் வழிபாடு மிகப் பிற்காலத்தில்தான் தமிழகத்திற்கு அறிமுகமாயிற்று. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சைவம் வழங்கியிருக்கும் அரிய கொடைகளை, இப்பகுதி உறுதி செய்து நிற்கிறது.



www.saivamonline.com